MCOP.No. 33/2019

Dated : 14.03.2024

Time: 01.00 p.m to 01.05 p.m

R.W- 1 சாட்சி செங்கோட்டுவேல் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் சார்பாக குறுக்கு விசாரணை.

**2**ம் எதிர்மனுதாரர் சார்பாக குறுக்கு விசாரணை

1) மேற்படி விபத்து ஏற்படுத்திய Hero honda TN 30 Q 1522 என்ற வாகனத்தின் உரிமையாளர் நான்தான் என்றால் 2018லேயே விற்பனை செய்துவிட்டேன். ஆனால் அந்த வாகனத்தின் ஆர்சி புத்தகம் என் பெயரில் தான் உள்ளது என்றால் கணேசன் பெயரில் மாறிவிட்டது. ஆனால் அந்த விவரம் எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு தாக்கல் செய்யும் வரை என் பெயரில் தான் வாகனத்தின் பதிவு சான்றிதழ் இருந்தது என்றால் அது தவறு. மேற்படி விற்பனைக்கு பிறகு பெயர் மாற்றம் செய்து கொள்ள நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

2) அது சம்மந்தமாக வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கும் அறிவிப்பு வழங்கவில்லை. எமாசாஆ.1 ஆவணம் ஒரு இருசக்கர வாகனம் விற்பனை செய்யும் பதிவின் படி இல்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மேலும் அது நான்கு சக்கர வாகன விற்பனைக்கு சம்மந்தப்பட்டது என்றும் எனவே அந்த ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. மேலும் என்னுடைய ஆர்சி புத்தகத்தில் உள்ள இன்ஞின், சேஸ் நெம்பருக்கும் டெலிவரி ரசீது எமாசாஆ.1 ல் உள்ள எண்ணும் வேறு வேறாக உள்ளது என்றும் எனவே எமசஆ.1 மேற்படி வண்டிக்கு உரியதே இல்லை என்றால் அது தவறு.

3) எனவே மேற்படி வாகனத்தின் உரிமையாளர் நான்தான் என்றும் விற்பனை செய்துவிட்டேன் என சொல்வது பொய் என்றால் சரியல்ல. மேற்படி வாகனத்தை ஓட்டி சென்ற வாகன ஓட்டுநருக்கு காப்பீடு இல்லாததால் அதன் உரிமையாளர் என்ற முறையில் நான்தான் மனுதாரருக்கு இழப்பீடு செலுத்தவேண்டும் என்றால் சரியல்ல. எமசாஆ.1 பொய்யான ஆவணம் என்றும் எனவே எனக்கு எதிராக குற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணம் இழப்பீடு செலுத்துவதில் இருந்து தப்பிப்பதற்காக பொய்யாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/-K.Ananthan**
**Accidents Claim Tribunal, Attur**